©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 149] CHENNAI, THURSDAY, JUNE 9, 2016
Vaikasi 27, Thunmugi, Thiruvalluvar Aandu–2047

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், குன்னம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் அ2/612/2015.)*

**No. VI(2)/72(a-1)/2016.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205, உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குன்னம் ஊராட்சி மன்ற தலைவர் கூட்ட அறிவிப்பினை அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி ஒப்புதல் பெற தவறியமைக்கும், தீர்மானப் பதிவேட்டில் போதிய அளவில் உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற தவறியமைக்கும், படிவம் 17ன்படி தெரு விளக்கு, கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பிற்கான பொருட்களின் தேவையை கணக்கீடு செய்து பொருட்கள் வாங்காமலும் பதிவேடு 18 முழுமையாக பராமரிக்காமலும், அரசு ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றாமலும், தொழில்நுட்ப அலுவலர்களின் பரிந்துரை இல்லாமலும் ஊராட்சி நிதியிலிருந்து விதிமுறைகளுக்கு புறம்பாக காசோலைகளில் கையொப்பமிட்டு தொகை ரூ. 14,43,659/— எடுத்தமைக்காக குன்னம் ஊராட்சி மன்ற தலைவர் திரு. எம். காமராஜ் என்பவரை குன்னம் ஊராட்சி மன்ற தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

விழுப்புரம்,
2016 மே 30.

**எம். லக்ஷ்மி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

## ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் விழுப்புரம்.

**விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், குன்னம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் அ2/612/2015.)*

**No. VI(2)/72(a-2)/2016.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 206, உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குன்னம் ஊராட்சி மன்ற தலைவருடன் சேர்ந்து கூட்ட அறிவிப்பினை அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி ஒப்புதல் பெற தவறியமைக்கும், தீர்மானப் பதிவேட்டில் போதிய அளவில் உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற தவறியமைக்கும், படிவம் 17ன்படி தெரு விளக்கு, கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பிற்கான பொருட்களின் தேவையை கணக்கீடு செய்து பொருட்கள் வாங்காமலும் பதிவேடு 18 முழுமையாக பராமரிக்காமலும், அரசு ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றாமலும், தொழில்நுட்ப அலுவலர்களின் பரிந்துரை இல்லாமலும் ஊராட்சி நிதியிலிருந்து விதிமுறைகளுக்கு புறம்பாக காசோலைகளில் கூட்டு கையொப்பமிட்டு தொகை ரூ. 14,43,659/— எடுத்தமைக்காக குன்னம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. எஸ். கணேசமூர்த்தி என்பவரை குன்னம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

விழுப்புரம்,
2016 மே 30.

**எம். லக்ஷ்மி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர்/*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU